சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# Women of Purpose

**"சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்."**

**[நீதி.31:30]**




**மார்ச் – 2026**

**(மடல் - 26) செய்தி – 3**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 1 |
| ஆயரம்மா மடல் | 3 |
| பெண்கள் பகுதி | 5 |
| Children's Corner | 9 |
| வேத வினாக்கள் | 20 |
| கோதுமை மணி | 25 |
| துணுக்குகள் | 27 |
| ஆலய பக்கம் | 29 |

**அப்பொழுது ஆகார்: என்னைக் காண்பவரை நானும் இந்த இடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னுடன் பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பெயரிட்டாள். ஆதி. 16:13**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். புதிய வருடத்தின் இரண்டாவது மாதத்தை நிறைவு செய்யக் கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்தப் புதிய மாதம் நமக்கு ஆசீர்வாதமான காலங்களாகக் காணப்பட ஆண்டவர் அருள் செய்வாராக. நமது திருச்சபையின் ***பெண்கள் சிறப்பு ஆராதனையை*** இந்த மாதம் 6ஆம் தேதி கொண்டாட இருக்கிறோம். திருச்சபையின் பணிகளில் பெண்கள் ஐக்கிய சங்கம் ஆற்றி வருகின்ற மகத்தானப் பணிகளுக்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். அதோடு **இந்த மாதம் 13,14,15,** ஆகிய நாட்களில் ***Convention & Retreat*** நடைபெற உள்ளது, ஜெபிப்போம், உற்சாகமாகப் பங்குபெறும்படி அன்புடன் அழைக்கிறேன்.

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் இல்லாதத் துறையே இல்லை. அரசியல், பொருளாதாரம், அறிவியல், கலை, இலக்கியம், காவல், இராணுவம் இப்படி எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாகப் பெண்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லாத் துறைகளிலும் பெண்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு முக்கியத்தும் கொடுக்கும் பொழுது, கிறிஸ்தவத் திருச்சபைகளும் பெண்களுக்குச் திருச்சபையின் செயல்பாடுகளிலும், அதிகாரங்களிலும் குறிப்பிடத்தக்கப் பங்கைக் கொடுக்க முன்வரவேண்டும். ஏனெனில் கடவுள் எல்லா மக்களையும் நேசிக்கிறார்.

### *1. அடிமைப்பெண் ஆகார்:*

பொதுவாக சாரளைக் குறித்து அதிகம் நாம் பேசுவோம். ஏனெனில் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட யூத சமுதாயம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவள். ஆனால், ஆகாரைக் குறித்து நாம் அதிகமாகப் படிப்பதில்லை. உண்மையில் ஆண்டவர் எல்லா மக்களையும் நேசிக்கிறார். அவருடையப் பார்வையில் வேறுபாடு என்பதே இல்லை. (கலாத்தியர் 3:28) அடிமைப் பெண்ணாகிய ஆகாரையும் ஆண்டவர் நேசிக்கிறார். ஆண் ஆதிக்கம் நிறைந்த யூத சமுதாயத்தில், ஆகார் என்கின்ற பெண், அதிலும் அவள் ஒரு அடிமை, அவள் அந்நிய தேசத்து அடிமை. சமுதாயத்தால் புறக்கணிக்கபட்ட அடிமைப் பெண் ஆகாரை கடவுள் எவ்வளவு அன்பு கூறுகிறார் என்பதை ஆதியாகமம் 16ஆம் அதிகாரம் நமக்குச் சொல்லுகிறது.

அக்காலத்தில் அடிமைகள் என்பது மிகவும் சாதாரணமான ஒன்று. பல வழிகளில் ஒருவன் அடிமையாகிறான். விலைக்கு வாங்குவதன் வழியாக, போரிலே வெற்றி பெற்றால் கைதிகளாகப் பிடித்து அடிமையாக்குவார்கள். அடிமைக்குப் பிறந்தவர்கள் அடிமையாகவே இருக்கிறார்கள். தாங்கள் வாங்கியக் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாவிட்டால் அடிமையாகிறான். ஆகார் எப்படி அடிமையாக்கப்பட்டாள் என்பது நமக்குச் சொல்லப்படவில்லை. அவள் எகிப்து தேசத்து அடிமைப்பெண். ஒருவேளை பஞ்சம்

காரணமாக எகிப்திற்குச் சென்ற ஆபிரகாமுக்கும், குறிப்பாக சாராய்க்குப் பணிவிடைசெய்ய பார்வோன் பரிசாகக் கொடுத்திருக்கலாம்.

***2. அடிமை ஆகாரை ஆபிராமுக்குக் கொடுத்த சாராய்:***

சாராய் தன் அடிமைப் பெண்ணை ***அடிமை நிலையிலேயே*** தன் கணவருக்குக் கொடுக்கிறாள். இங்கு, ஆகாரின் விருப்பு, வெறுப்பு எதுவும் கேட்கப்படவில்லை. கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் அவள் அந்நிய நாட்டு அடிமை. அவளுக்கென்று எந்த உரிமையும் இல்லை. எனவே சாராய் தன்னுடைய சொந்த விருப்பத்தின்படியே தனது கணவருக்கு ஆகாரைக் கொடுக்கிறாள். எளிய மக்களைக் குறித்து இந்த சமுதாயம் கவலைப்பட்டதே இல்லை. தங்கள் ஆசையை நிறைவேற்றப் பயன்படுத்தும் பாத்திரமாகவே கருதுகிறது. ***ஆகாரை ஒரு தாய்மை உணர்வு உள்ள பெண்ணாக சாராய் நினைக்கவில்லை.*** அவளை ஒரு சட்டப்பொருளாகவேப் பார்க்கிறாள். எனவேதான் பிரச்சனை ஏற்படுகிறது. (ஆதியாகமம் 16:16) சாராய் ஆகாரை கடினமாய் நடத்தினபடியால் அவள் சாராயை விட்டு ஓடிப்போகிறாள்.

***3. கடவுளை சந்தித்த ஆகார்:***

ஆபிரகாம் வீட்டில் அடிமையானாலும் பாதுகா இருந்தது. உணவும் கிடைத்தது. ஆபிரகாமின் கொஞ்ச அன்பும் கிடைத்தது. ஆனால் இப்பொழுது எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவள் வனாந்தரத்துக்கு ஓடிப்பேப்புாகிறாள். இந்த வேளையில்தான் ஆகாரை ஆண்டவர் சந்திக்கின்றார். (ஆதியாகமம் 16:8) ***ஆகாரே என்று பெயர் சொல்லி ஆண்டவர்*** அழைக்கிறார். பொதுவாக அடிமைகளை பேர் சொல்லி அழைப்பதில்லை. தங்களின் பெயர் அவருக்குத் தெரிவதுமில்லை ஆனால், ஆண்டவர் ஆகாரை பெயர் சொல்லி அழைக்கிறார். அதோடு ஆண்டவர் அவளுக்கு வாக்குறுதியும் கொடுக்கிறார். ***நீ ஒரு குமாரனைப் பெறுவாய், கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியால் அவனுக்கு இஸ்மவேல் என்று பெயரிடுவாயாக*** என்கிறார். (ஆதியாகமம் 16:11) திருமறையில் முதல் முதலில் கர்த்தரால் பெயரிடப்பட்டவர் இந்த அடிமைப் பெண்ணின் மகனாகிய இஸ்மவேல்தான். அதோடு துன்பத்தின் மத்தியில் ஓடிவந்த தன்னைக் கண்டு, பெயர் சொல்லி அழைத்து, வாக்குத்தத்தமும் கொடுத்த ஆண்டவருக்கு ***நீர் என்னைக் காண்கின்ற தேவன் என்று பெயர் சூட்டுகிறாள்.***

ஒருவேளை சமுதாயம் எவ்வளவு ஒதிக்கித் தள்ளினாலும், அடிமைப்பெண் என்று எண்ணினாலும், ஆண்டவர் நம்மைக் காண்கின்ற தேவன். தேடி வந்து உதவுகின்ற ஆண்டவராகவும் இருக்கிறார். ஆண்டவர் எல்லா மக்களையும் நேசிக்கிறார். பெண்களும் கடவுளுடைய பார்வையில் சிறப்பானவர்கள். சாதாரண அடிமைப்பெண்ணை மிகப்பெரிய சந்ததியை உருவாக்கும் தாயாக ஆண்டவர் ஆசீர்வதிக்கின்றார்.

நம்மையும் நம்முடைய குடும்பங்களையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.


***Res. : 02 6791915***

***Mobile : 054 7401421***

***mail : asamuelrev@gmail.com***

***கிறிஸ்துவின் பணியில்***

***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***

Rev. Dr. A. Samuel

**"சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்." [நீதி.31:30]**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாக பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன் இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

**"சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" நீதி 31:30.**

விவிலியம் உள்ளத்தின் அழகுக்கும், (Inner Beauty) இறைவழியில் நடக்கும் வாழ்க்கைக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இறைவனிடம் ஒரு பெண் கொண்டிருக்கும் பயபக்தியிலும், நற்பண்புகளிலுமே உண்மையான அழகு வெளிப்படுகிறது. அப்படிப்பட்ட பெண்ணே உண்மையான புகழுக்கு உரியவர்கள். இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் தெபொராள் (Deborah) ஒரு தனித்துவமான மற்றும் வலிமைமிக்க ஆளுமையுள்ள பெண்ணாக காணப்படுகிறாள். தெபொராளுடைய ஆளுமையைக்குறித்து நியாயாதிபதிகள் 4ஆம் மற்றும் 5ஆம் அதிகாரங்களில் விவிக்கப்பட்டுள்ளது. விசுவாசம், தலைமைத்துவம் மற்றும் தைரியத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

**தீர்க்கதரிசியான தெபொராள்:**

இஸ்ரவேல் மக்கள் கானானிய ராஜாவாகிய யாபீன் என்பவனால் இருபது வருடங்களாகக் கொடூரமாக ஒடுக்கப்பட்ட காலத்தில் தெபொராள் எழும்புகிறார். இவர் எப்பிராயீம் மலைநாட்டில் ஒரு பேரீச்ச மரத்தின் கீழ் அமர்ந்து மக்களுக்கு நியாயம் விசாரித்து வந்தார். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண் நியாயாதிபதிகளில் இவரே முதன்மையானவர்.தெபொராள் வெறும் ஒரு அரசியல் தலைவி மட்டுமல்ல, அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்தார். தேவன் அவரோடு பேசினார், அவர் வழியாகத் தமது விருப்பத்தை மக்களுக்குத் தெரிவிக்கிறார். லபிதோத்தின் மனைவியாகிய இவர், அக்காலத்து ஆணாதிக்கச் சமூகத்தில் ஒரு தாயைப் போல இஸ்ரவேலை வழிநடத்தி வருகிறாள்.

**போக்களத்தில் தெபொராள்:**

யாபீனின் படைத்தலைவன் சிசெரா, 900 இரும்பு ரதங்களோடு இஸ்ரவேலரை அச்சுறுத்தினான். அப்போது தெபொராள், தேவனுடைய கட்டளையின்படி பாராக்கு என்பவரை அழைத்து, யுத்தத்திற்குச் செல்லும்படி அறிவுறுத்தினார். ஆனால் "நீ என்னோடே கூட வந்தால் போவேன், நீ வராவிட்டால் போகமாட்டேன்" என்று பாராக்கு

கூறினார். தெபொராளின் தைரியமாகவும், தயங்காமலும் அவரோடு போருக்குச் செல்ல சம்மதிக்கிறார். ஆனால், ”இந்த யுத்தத்தின் கீர்த்தி உனக்குக் கிடைக்காது, ஒரு ஸ்திரீயின் கையினால் தேவன் சிசெராவை ஒப்புக்கொடுப்பார்” என்று முன்னறிவித்தார்.

**பெண்ணின் கையில் வெற்றி:**

தாபோர் மலையில் நடந்த யுத்தத்தில், தேவன் பெரும் மழையையும் வெள்ளத்தையும் வரவழைத்து சிசெராவின் இரும்பு ரதங்களைச் சேற்றில் சிக்க வைத்தார் (நியாயாதிபதிகள் 5:21). சிசெரா தப்பியோடி யாகேல் என்ற பெண்ணின் கூடாரத்தில் தஞ்சம் புகுந்தான். அங்கு யாகேல் ஒரு கூடார ஆணியைக் கொண்டு சிசெராவைக் கொன்றார். தெபொராள் முன்னறிவித்தபடியே ஒரு பெண்ணின் கையில் வெற்றி கிடைத்தது. அஸ்ரவேல் மக்கழுக்கு விடுதலை.

**தேபொராளின வெற்றி பாடல். (The Song of Deborah)**

யுத்த வெற்றிக்குப் பிறகு, தெபொராளும் பாராக்கும் இணைந்து பாடிய பாடல் நியாயாதிபதிகள் 5-ம் அதிகாரத்தில் உள்ளது. இது எபிரெயக் கவிதைகளில் மிகவும் பழமையானது மற்றும் உணர்ச்சிகரமானது. இப்பாடலில் அவர்: தேவனுடைய வல்லமையைத் துதிக்கிறார். யுத்தத்திற்கு வந்த கோத்திரங்களைப் புகழ்கிறார். யுத்தத்திற்கு வராமல் ஒதுங்கியவர்களைக் கண்டிக்கிறார். தன்னை ”இஸ்ரவேலில் ஒரு தாயாக” விவரிக்கிறார்.

சூழ்நிலைகள் கடினமாக இருந்தாலும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பவேண்டும். விசுவாசவாழ்வில் மற்றவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். கடவுளுக்கு மகிமை செலுத்த வேண்டும். வெற்றி கிடைத்தவுடன், அந்தப் புகழைத் தான் எடுத்துக்கொள்ளாமல் பாடல்கள் மூலம் தேவனுக்கே மகிமை செலுத்தினார். தெபொராளின் வெற்றி என்பது தனிமனித வெற்றி அல்ல. அது தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால் கிடைத்த வெற்றி. புறம்பான அழகுக்கு முக்கியத்துவம் தராமல், நாம் கர்த்தருக்கு பயந்து அவருடைய வார்த்தையின்படி செயல்பட வேண்டும்.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**மீட்பரின் பணியில்**
***திருமதி.ஜெபா சாமுவேல்***

## குணசாலியான ஸ்திரீ



பைபிளின் ஞான இலக்கியங்களில் சிறப்பிடம் பெற்ற நூல் நீதிமொழிகள். அதில் 31ஆம் அதிகாரத்தின் பின்பகுதி (31:10–31) "குணசாலியான ஸ்திரீ"யின் வாழ்க்கைச் சித்திரமாக விளங்குகிறது. இது ஒரு பெண்ணின் வெளிப்புற அழகை அல்ல, **அவள் உள்ளத்தின் நற்பண்புகளையும், தேவபக்தியையும்** புகழ்கிறது. "அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது." (நீதி. 31:10) என்று சொல்லி, அவள் மதிப்பை உயர்த்துகிறது.

### ♥ தெய்வபயம் – அவளின் அடித்தளம்

"***சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.***"(நீதி.31:30).

குணசாலியான ஸ்திரீயின் வாழ்க்கையின் மையம் தெய்வபயம். தெய்வபயம் இருக்கும்போது மரியாதை, கீழ்ப்படிதல், அன்பு ஆகியவை கூடவே வரும். தேவனை மையமாகக் கொண்ட வாழ்க்கைதான் அவளின் அனைத்து செயல்களுக்கும் திசை காட்டுகிறது. முக்கியமாக குடும்பத்தைக் கட்ட தேவையான அன்பும் ஞானமும் தேவபயத்தினால் உருவாகிறது.

தெய்வபயம் இருப்பதால் அவள் தன்னை ஆவியின் கனியால் அலங்கரிக்கிறாள். ஒவ்வொரு கனியும் தன் வீட்டைக் கட்டும் கற்களாக மாறுகிறது. தன் வீட்டாராலும் அனைவராலும் புகழப்படுகிறாள்.

### ♥ குடும்பப் பொறுப்பு மற்றும் விசுவாசம்



"அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது." (31:11). அவள் கணவனுக்கும், குடும்பத்தினருக்கும் விசுவாசமானவள். குடும்பத்தைக் கலைக்கும் சந்தேகம் வீட்டில் நுழைய அங்கு வாய்ப்பே இல்லை. வீட்டின் நிர்வாகத்தில் ஞானத்துடன் நடந்து, குடும்பத்தை ஒழுங்காக வழிநடத்துகிறாள் (31:27). குடும்பம் அவளால் ஆசீர்வதிக்கப்படுகிறது. ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கும் பின்னால் ஒரு பெண் உண்டு என்று சொல்வார்கள். புருஷனுடைய சம்பத்துக்கு குறையாது இருக்க, நம்பிக்கைக்கு பாத்திரமாய் இருக்கிற குணசாலியான ஸ்திரீ காரணமாய் இருக்கிறாள்.



♥ **உழைப்பு மற்றும் முயற்சி**

“ஆட்டுமயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலைசெய்கிறாள்.”(31:13). அவள் சோம்பேறி அல்ல; உழைப்பாளி. காலையில் எழுந்து குடும்பத்திற்காக உழைக்கிறாள் (31:15). உழைப்பின் மூலம் அவள் குடும்பத்தின் நலனை உயர்த்துகிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்(31:28).

♥ **இரக்கம் மற்றும் கருணை**



“சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்.” (31:20). அவளின் வாழ்க்கை தனக்காக மட்டும் அல்ல; சமூகத்திற்கும் ஆசீர்வாதம். கருணை மனம் அவளை சிறப்பிக்கிறது. தன்னை சுற்றியுள்ளவர் நலனிலும் அக்கறை காட்டும் பெண் குணசாலியான ஸ்திரீ.

♥ **ஞானம் மற்றும் இனிய வார்த்தைகள்**

“தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது.” (31:26). அவள் பேசும் வார்த்தைகள் குடும்பத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்புகின்றன. ஞானமும் அன்பும் இணைந்த பேச்சு அவளின் அழகு. அநேக பிரச்சனைகள் உருவாகிறதற்கு காரணம் வீண் வார்த்தைகளே. அத்தகைய வீண் வார்த்தைகள் குணசாலியான ஸ்திரீயின் அதிகாரித்தில் இல்லை.



♥ **வெளிப்புற அழகு அல்ல, உள்ளார்ந்த அழகு**

“சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்;”(31:30). இது வெளிப்புற அலங்காரத்தைத் தாழ்த்துவது அல்ல; ஆனால் நிலையான மதிப்பு **ஆவிக்குரிய குணாதிசயங்களில்** இருக்கிறது என்பதை உணர்த்துகிறது.

குணசாலியான ஸ்திரீ என்பது ஒரே ஒரு பெண்ணின் வர்ணனை அல்ல; அது **ஒவ்வொரு கிறிஸ்தவ பெண்மணிக்கும் ஒரு முன்மாதிரி**. தேவபயம், உழைப்பு, விசுவாசம், கருணை, ஞானம் ஆகிய குணங்களால் அலங்கரிக்கப்படும் வாழ்க்கைதான் உண்மையான மகிமை.

“***அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள்; அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது.”*** (நீதி. 31:31).

**ஜெபசீலி ஆசீர்**




“பெண்கள் வீட்டின் கண்கள்” என்பது முதுமொழி. ஆனால் அவர்கள் கருத்துடன் எதையாவது செய்தால் பல வேளைகளில் மெச்சப்படுவதில்லை. வீட்டிற்கு திரும்பி வர எவ்வளவு நேரமாகும் என கணவனை மனைவி கேட்டுவிட்டால் குற்றம் சாட்டப்படுகிறாள். பிள்ளைகள் நல்ல குணமுள்ளவர்களாக இருந்தால் credit அப்பாவுக்கு. அநேக சூழ்நிலைகளில், பெண்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. கனப்படுத்தப்படுவதில்லை. பிரயோஜனமுள்ளவர்களாக கருதப்படுவதில்லை. அவர்களது தேவைகள் சந்திக்கப்படுவதில்லை. ஒரு மனைவியாக, மகளாக, மருமகளாக, தாயாக நாம் விரும்பும் எல்லாவற்றையும் பெற முடியாமலிருக்கலாம். ஆனால் எல்லா சூழ்நிலையிலும் கிறிஸ்துவுக்குள் ஒரு சம்பூரணமான நிறைவை, திருப்தியை, உள்ளான பரிபூரணத்தை அனுபவிக்க முடியும். எப்படியென்றால் இயேசுகிறிஸ்து நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவுமே உலகிற்கு வந்தார்.

**இயேசுகிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டார்:**

நம்மை வேதம் “பெலவீன பாண்டம்” என்று வர்ணிக்கிறது. ஆனால் நாம் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரய் பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள். முதலாவது நம்மை நாம் ஏற்றுக்கொள்ள பழக வேண்டும். நம் சரீரத்தில் ஏற்படும் பெலவீனங்களில் வரும் எரிச்சல், மன உளைச்சல் இவைகளை கணவன், மற்றும் பிள்ளைகளிடம் காட்டாத வண்ணம் தெய்வ பயத்தோடு கையாள வேண்டும். வேதாமத்தில் பெண்களுக்கு சிறப்பிடம் உண்டு.

**இயேசு பெண்களுக்கு கற்றுக்கொடுத்தார்**:

விசுவாசம், உயிர்த்தெழுதல் பற்றி சீஷர்கள் கூட அறிந்திராத காலக்கட்டத்தில் மார்த்தாள், மரியாளுக்கு போதித்தார். சில காரியங்கள் கற்றுக்கொள்ள நமக்கு கடினமாக இருந்தால், கற்றுதரும் இயேசுவிடம் கேட்டுக் கற்றுக்கொள்ளலாம்.

அவரே நமது ஞானம். சமாளிக்க முடியாத சூழ்நிலைகளை ஆண்டவரிடம் கொண்டுவரும்போது அழகாக முடித்து தருவார்.

**இயேசு பெண்களை கனப்படுத்தினார்:**

ரோமர் இஸ்ரவேலை ஆண்ட காலங்களில் ரோம சாம்ராஜ்யத்தில் பெண்கள் அடிமைகளை விடக் கேவலமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டனர். ஆனால் இயேசுகிறிஸ்து பெண்களை கனப்படுத்தினார். அவர்கள் தேவைகளை சந்தித்தார். உயிர்த்தெழுந்த நாதரைக் குறித்து பறைசாற்றும் வாய்ப்பும் பெண்ணிற்கே கொடுக்கப்பட்டது. நாமும் கூட எல்லா சூழ்நிலைகளிலும் மற்றவர்களை கனம் பண்ண வேண்டும். அப்பொழுது தான் பிறர் நம்மிடமிருந்து இந்த நல்ல குணத்தைக் கற்றுக்கொள்வர்.

**இயேசு பெண்களது சேவையை ஏற்றுக்கொண்டார்:**

இன்று பெண்கள் எல்லா துறைகளிலும் சேவை செய்கிறார்கள். அது மதிக்கத்தக்கது. சீமோன் வீட்டில் பாவியாகிய ஸ்திரீ(லூக்கா 7:44) செய்த பணியை இயேசுகிறிஸ்து ஏற்றுக்கொண்டார். மார்த்தாள், மரியாள் தங்கள் வீட்டை இயேசுவுக்கு இளைப்பாறக் கொடுத்து கவனித்தார்கள். அநேக ஸ்திரீகள் இயேசுவின் ஊழியத்திலும் பங்கு வகித்தார்கள்.

**இயேசு பெண்களது தேவையை சந்தித்தார்:**

சுகவீனமாயிருந்த வியாதியஸ்தர்களை குணமாக்கினார். மரித்த விதவையின் மகனுக்கு உயிர் கொடுத்தார். பிசாசு பிடித்த பெண்களின் தேவையை அறிந்து விடுதலைக் கொடுத்தார். எல்லா தேவைகளையும் சந்திக்கிறவர் நம் தேவன். பரிகாரியாகிய இயேசுவை நாம் விசுவாசிக்கும்போது நம் தேவைகள் யாவும் சந்திக்கப்படும். நாம் இயேசுவண்டை வரும்போது அவர் நம் குறைகளை கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாக்குவார்.

**ஷர்மிளா ராஜேஷ்**

# CHILDREN'S CORNER

Dear Children,

The theme this March is "**WOMEN**".

Throughout the Bible and church history, Women have played an important role in sharing God's love and making the world a better place.



Today, christian women are helping the world by caring for the sick, helping the poor, educating children, and standing up for justice.

Their faith inspires them to serve others with love and courage.

God uses women in amazing ways! When women follow Jesus, they help shine His light in the church, in their communities, and in the world.



## GEMS TO GLEAN FROM THE BIBLE

1. **Our worth comes from God, not the world -** You are loved and valued just as you are—likes, looks, and opinions don't define you (Psalm 139:14)

2. **Be strong and courageous in doing what's right** - God gives you strength to stand firm, even when it's hard or unpopular (Proverbs 31:25)




3. **Choose kindness and love in your actions** - Small acts of love can make a big difference and reflect Jesus to others (Colossians 3:12)


4. **Trust God with your future** - God has good plans for your life—walk with Him one step at a time (Jeremiah 29:11)

5. **Be a light wherever you are** - Your words and actions can point others to Christ, no matter your age ( 1 Timothy 4:12)

## SAYING IT WITH PICTURES…





Let the peace of Christ rule in your hearts, since as members of one body you were called to peace. And be thankful.
– Colossians 3:15 NIV




The wise woman builds her house, but with her own hands the foolish one tears hers down.
– Proverbs 14:1 NIV

## BOOKS OF THE BIBLE #3: LEVITICUS



**Author**: Moses

**When It Happened**: 1490 BC

**Chapters**: 27

**Key People**: Moses, Aaron

**Summary**: Leviticus is a book about God's laws to His people. These laws would guide the people in their relationship with God.

God told the people they must kill animals as sacrifices. The people sacrificed these animals so God would forgive their disobedience.

The Book of Leviticus points to Jesus and explains why He had to die on the Cross.

A perfect sacrifice had to be offered for forgiveness of sins.

**Jesus is that perfect sacrifice**.



## TINY TOTS SECTION

### COLOR IN...

### I PRAISE YOU GOD BECAUSE I AM FEARFULLY AND WONDERFULLY MADE.



## What makes people special?

__________ are __________

__________ we are __________

in __________ __________, as

__________ and __________,

to __________ Him.





# Lent is a Journey

During Lent we journey with Jesus from the beginning of his ministry to his last days. While we travel with him we prepare our hearts for Easter.








**Can you make your way through each of these mazes?**

# REPENTANCE PATH

Because of Jesus Christ, we can repent when we make a wrong choice.
Repenting helps us grow and do better every day! Naya was mean to her little brother.
Guide Naya through each picture in the maze to help her take steps to repent.



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "WOMEN"

1. Who saved baby Moses by trusting God? (Exodus 2:1–8)

| | | | |
|---|---|---|---|
| a. | Sara. | b. | Miriam. |
| c. | Deborah. | d. | Ruth. |

2. Which woman led Israel as a judge and prophet? (Judges 4:4–5)

| | | | |
|---|---|---|---|
| a. | Esther. | b. | Hannah. |
| c. | Deborah. | d. | Abigail. |

3. Who showed great kindness and loyalty to her mother-in-law? (Ruth 1:16)

| | | | |
|---|---|---|---|
| a. | Rachel. | b. | Ruth. |
| c. | Leah. | d. | Martha. |

4. Which woman saved her people by approaching the king? (Esther 4:14–16)

| | | | |
|---|---|---|---|
| a. | Mary. | b. | Naomi. |
| c. | Esther | d. | Priscilla. |

5. Who was chosen by God to be the mother of Jesus? (Luke 1:30–31)

| | | | |
|---|---|---|---|
| a. | Elizabeth. | b. | Anna. |
| c. | Mary. | d. | Joanna. |

6. Which woman was the first to tell others that Jesus had risen? (John 20:16–18)

| | | | |
|---|---|---|---|
| a. | Mary, mother of James | b. | Salome. |
| c. | Martha. . | d. | Mary Magdalene. |

7. Who welcomed Jesus home and listened to His teaching? (Luke 10:38–42)

| | | | |
|---|---|---|---|
| a. | Mary of Bethany. | b. | Lydia. |
| c. | Dorcas. | d. | Phoebe. |

8. Who used her skills to help the early church and the poor? (Acts 9:36)

| | | | |
|---|---|---|---|
| a. | Mary of Bethany. | b. | Lydia. |
| c. | Dorcas (Tabitha). | d. | Phoebe |

9. Who opened her home to support the church in Philippi? (Acts 16:14–15)

| | | | |
|---|---|---|---|
| a. | Mary of Bethany. | b. | Lydia. |
| c. | Dorcas (Tabitha). | d. | Phoebe |

10. Who worked with Paul in teaching others about Jesus? (Acts 18:24–26)


| | | | |
|---|---|---|---|
| a. | Mary. | b. | Naomi. |
| c. | Esther | d. | Priscilla. |


11. Who prayed faithfully and trusted God for a child? (1 Samuel 1:10–20)

| | | | |
|---|---|---|---|
| a. | Esther. | b. | Hannah. |
| c. | Deborah. | d. | Abigail. |

12. How many books of the Bible are named after women?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| a. | 1. | b. | 2. | c. | 3. | d. | 4. |


WOMEN IN THE OLD TESTAMENT
Match each name with the correct description.
1. I was the first woman on earth. My husband is Adam. We lived in the Garden of Eden. (See Genesis 3:20.)
2. A man asked me for water from a well. I gave water to him and his 10 camels. Then I went with him to meet a man named Isaac. Isaac became my husband. (See Genesis 24:15–19, 64–67.)
3. My people were in trouble. I asked them to pray and fast for me. Then I asked my husband, the king, to save them. He listened, and my people were saved. (See Esther 7:2–4.)
4. I could not have children for many years. The Lord promised that I would have a son. I had faith and patience. The Lord blessed me with a son named Isaac. (See Genesis 21:1–3.)
5. I was a judge and prophetess. I helped the Israelites come closer to God. I sang a song to praise God after He helped the people. (See Judges 4:4; 5:1–2.)
6. When my son died, his wife, Ruth, took care of me. When Ruth remarried and had a baby, I helped take care of her son. (See Ruth 1:8, 14–18.)
A. REBEKAH
B. ESTHER
C. DEBORAH
D. NAOMI
E. SARAH
F. EVE


Quick Quiz
Rebekah gave water from the well to how many camels? (See Genesis 24:10, 18–20.)
a. 5
b. 82
c. 10
d. None because she was allergic to camel fur

# PARABLES DECODED #3:

## The Widow's Offering

Jesus said, "Watch out for the teachers of the law. They like to walk around in flowing robes and be greeted in the marketplaces, and have the most important seats in the synagogues and the places of honor at banquets. They devour widows' houses and for a show make lengthy prayers. Such men will be punished most severely."

Find the 12 underlined letters in the picture below.





A poor widow gave an offering. What was it?



Write the word that means the opposite of the one given. Transfer the letters to the numbered lines to read the answer.

in ~ ___ ___ ___ (3 – 1)

laugh ~ ___ ___ ___ (19 18 7)

up ~ ___ ___ ___ ___ (– 14 2 22)

different ~ ___ ___ ___ ___ (23 10 9 5)

under ~ ___ ___ ___ ___ (20 4 17 6)

go ~ ___ ___ ___ P (8 1 14 15)

hot ~ ___ ___ ___ ___ (13 20 11 –)

down ~ ___ ___ (– 16)

fast ~ ___ ___ ___ ___ (8 12 14 2)

out ~ ___ ___ (21 22)

___ ___ ___   ___ ___ ___ ___   ___ ___ ___ ___ ___
1 2 3   4 5 6 7   8 9 10 11 12

___ ___ ___ ___ ___ ___   ___ ___ ___ ___ ___
13 14 15 16 17 18   19 20 21 22 23








What did the rich people put in the offering?



On the lines, write the letter that is found in only one word of the pair. Your answer will read from top to bottom. Write the answer on the lines below.



___ PALE – APE
___ SACHET – CHEST
___ WEAR – AWE
___ GREAT – TEAR
___ STALE – LAST
___ CHAIR – RICH
___ REMIT – TIRE
___ LOCAL – CALL
___ DUEL – LED
___ LEARN – REAL
___ STARE – SEAR
___ SERVE – EVER
___ STORE – REST
___ WAFER – WEAR
___ CAMEL – LACE
___ ABOUT – TUBA
___ KNIT – KIT
___ MAPLE – LAMP
___ PARTY – TARP


___ ___ ___ ___ ___   ___ ___ ___ ___ ___ ___ ___

___ ___   ___ ___ ___ ___ ___





Write the words from the coins on the lines. Read Jesus' words.

"___ ___ ___ ___ (19 29 34 3)
___ ___ ___ ___ ___ (32 23 21 12 33)
___ ___ ___ ___. ___ (17 14 4 24 31)
___ ___ ___ ___ ___ (1 8 20 2 6)
___; ___ ___, ___ ___ ___ (13 36 28 9 11 30)
___, ___ ___ ___ (25 35 18 7)
– ___ ___ ___ ___ ___ ___." (22 27 5 10 16 15)



# THE LENTEN SEASON




Lent is the time of year when Christians prepare for Easter. Lent begins on **Ash Wednesday**. Ashes are placed on the forehead by a priest, usually in the shape of a cross, as a symbol acknowledging sin.

It lasts for **40 days**, not counting Sundays, and ends the **day before Easter**. During Lent, many Christians **fast**. They do this in memory of Jesus Christ, who fasted for 40 days in the wilderness. Christians also spend time in **prayer**, **give money to charities**, and give up some of the things they might otherwise do for pleasure.




Lent is an important period of **reflection**, **growth**, and **new beginnings** in the Christian calendar. Traditionally, the colour of Lent is **Purple**. It solemnly reminds us of the pain and sacrifice of Jesus's death, and the joy in his royalty and resurrection.

## My Plan for Lent this Year

Lent is a time when we are called to refocus and live more simply while striving to be closer to God, and to live more like Jesus taught us to live our lives. Lent includes a focus on prayer, fasting, and almsgiving/service.

Make a plan for at least one thing you will do during Lent this year for each focus area of the Lenten season.

**Prayer:**

Ideas: Read from the Bible each day, specific time for quiet and prayer every day, pray for someone new from church/school/work each day, attend church at least once during the week other than on a Sunday.


**Almsgiving / Service:**

Ideas: Volunteer for a local organization, give up some of your normal spending and donate the money to those in need, help a friend or neighbor in need, visit and elderly friend or relative who doesn't get many visitors.

**Fasting:**

Ideas: Give up a certain food/drink/candy you love, give up the computer or TV one day per week, stop eating meals from out, give up an activity that wastes your time, focus on having simple meals during Lent, fast one day per week.

**This Lent let us try Pray, do Good and Reflect on the life of Jesus!**




## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of March is: ____________________________.
2. Gems that we can glean from the bible about "Women".
   a. ____________________________________________________
   b. ____________________________________________________
   c. ____________________________________________________
   d. ____________________________________________________
   e. ____________________________________________________
3. __________________ is the perfect sacrifice.
4. What did Jesus say about the widow's offering? _________________________
   ____________________________________________________________.
5. Lent last for ___ days, not counting __________ and ends the day before _____.
6. Lent is an important period of_____________, ___________, and _______________________.




**Dear Children, what are you giving up for Jesus this Lenten season 2026?**

**God bless,**
**Mrs. Briliya Jeyaseelan**

# Answers to February Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – "MEDICAL MISSIONS"

1. b. Because he had compassion.
2. b. Heal the sick.
3. d. A Samaritan.
4. b. Oil and Wine
5. b. A Doctor.
6. b. Pray for them
7. c. Jesus himself.
8. b. Healing.
9. c. Patient love.
10. b. Prayed.
11. b. Heal the sick
12. c. A Leper.

## Complete the Short Review Below...

7. The theme for the month of February is: **MEDICAL MISSION**.
8. What do Christian Medical Missions do?
   a. **Use their skills to heal the sick**
   b. **Serve in places with little or no healthcare**
   c. **Treat every person with dignity and compassion**
   d. **Share the hope of Christ through actions and words**
9. Who wrote the Book of Exodus? **Moses**
10. List 6 principles of Christian Medical Missions from the Good Samaritan parable.
    a. **Seeing the need;**
    b. **Providing medical care;**
    c. **Continuing care;**
    **d Crossing boundaries**
    **e. Giving time, effort, and resources**
    **f. Love motivated by faith**

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***
**Kindly avoid sending answers via WhatsApp.**



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

1. கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரரி யார்?
2. தீமோத்தேயுவின் பாட்டி யார்?
3. ஆரோனுடைய குமாரத்தி ஆசாரியனின் மனைவி யார்?
4. ஒற்றுக்கேட்க வந்த பெண் யார்?
5. நகசோனின் சகோதரி யார்?
6. ஆசேருடைய குமாரத்தி யார்?
7. மனாசே ராஜாவின் தாய் யார்?
8. சாதோக்கின் குமாரத்தி யார்?
9. பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் யார்?
10. அம்ராமின் அத்தை யார்?
11. தாவீதின் கொள்ளுப்பாட்டி யார்?
12. இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பெண்கள் யார்?
13. ரூபவதியும் சௌந்தரியமுடையவளுமாயிருந்த பெண் யார்?
14. அபியாயேலின் குமாரத்தி யார்?
15. சாமுவேலின் தாய் யார்?
16. நல்ல பங்கைத் தெரிந்து கொண்ட ஸ்திரீ யார்?
17. மோசேயின் தாய் யார்?
18. யோசேப்பின் மனைவி யார்?
19. கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் யார்?
20. கிரியைகளினாலே நீதியுள்ளவளாக்கப்பட்டவள் யார்?
21. நாகோருடைய மனைவி யார்?
22. நிபந்தனையின்றி கீழ்ப்படிந்த மகள் யார்?
23. தாவீதை ஜன்னல் வழியாய் இறக்கி விட்ட மனைவி யார்?
24. மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தவள் யார்?
25. மருமகள் பெற்ற பிள்ளையை வளர்க்கிற தாயானவள் யார்?
26. லாபானின் பாட்டி யார்?
27. இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவள் யார்?
28. போவாஸின் மனைவி யார்?
29. பேரீச்சமரத்தின் கீழே குடியிருந்தவள் யார்?
30. இஸ்காளின் சகோதரி யார்?
31. வெகு சௌந்தரவதியாயிருந்தவள் யார்?
32. பேழைக்குள் பிரவேசித்த மாமியார் யார்?
33. பொருத்தனை பண்ணி அதை நிறைவேற்றியவள் யார்?
34. சாராயின் அடிமைப்பெண் யார்?

35. ஆரோனின் சகோதரி யார்?
36. ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் யார்?
37. யூதாவின் தாய் யார்?
38. எண்பத்து நாலு வயதுள்ள பெண் தீர்க்கதரிசி யார்?
39. அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்கின ஸ்திரீ யார்?
40. ஓன் பட்டணத்து ஆசாரியனின் குமாரத்தி யார்?
41. போவாஸின் தாய் யார்?
42. எலிமெலேக்கின் மனைவி யார்?
43. காலேபின் குமாரத்தி யார்?
44. தீமோத்தேயுவின் தாய் யார்?
45. தாவீதை நேசித்தவள் யார்?
46. பெத்துவேலின் மகள் யார்?
47. ஆக்கில்லாவின் மனைவி யார்?
48. கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு தன் புருஷனுடனே ஒருமனப்பட்ட மனைவி யார்?
49. மோசேயின் மனைவி யார்?
50. கடும் ஜுரமாய்க் கிடந்தவள் யார்?
51. மக்லோனின் மனைவி யார்?
52. ஒத்னியேலின் மனைவி யார்?
53. பயித்தியக்காரனுடன் வாழ்ந்த புத்திசாலி யார்?
54. அற்பமாய் எண்ணப்பட்டவள் யார்?
55. கர்வாலி மரத்தின் கீழ் அடக்கம் பண்ணப்பட்டவள் யார்?
56. இரத்தாம்பரம் விற்கிறவள் யார்?
57. அப்சலோமின் சவுந்தரியமுள்ள சகோதரி யார்?
58. பார்வோனின் மனைவி யார்?
59. ஆசாரியனாகிய யோய்தாவின் பெண்ஜாதி யார்?
60. பென்யமீனின் பாட்டி யார்?
61. நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தவள் யார்?
62. சல்லூமின் மனைவி யார்?
63. லபிதோத்தின் மனைவி யார்?
64. தீவிரித்து எழுந்து போய் தாவீதுக்கு மனைவியானவள் யார்?
65. ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருந்தவள் யார்?
66. யோவாபின் அத்தை யார்?
67. கேனுபாத்தை பார்வோனின் வீட்டில் வளர்த்தவள் யார்?
68. சாலொமோனின் தாய் யார்?
69. சீஷி யார்?
70. எருசலேமின் இரண்டாம் வகுப்பில் குடியிருந்த தீர்க்கதரிசியானவள் யார்?
71. செல்வமாய் வளர்ந்த ரூபவதி யார்?
72. மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாய் யார்?
73. மோசே என்று பேரிட்டவள் யார்?

74. ஆரோனின் மனைவி யார்?
75. தியத்தீரா ஊராள் யார்?
76. தூபால் காயீனுடைய சகோதரி யார்?
77. அகசியாவின் சகோதரி யார்?
78. குத்துண்ட மீதியானிய ஸ்திரீ யார்?
79. யாரைக் குறித்து புலம்புவது இஸ்ரவேலின் வழக்கமாயிற்று?
80. கர்மேல் ஊராள் யார்?
81. தாவீது ராஜாவை அவமதித்த ராஜ குமாரத்தி யார்?
82. மொர்தெகாயின் சிறிய தகப்பன் குமாரத்தி யார்?
83. காணிக்கை கொண்டு வருவாள் - யார்?
84. யெஸ்ரயேல் ஊராள் யார்?
85. பெயெர்செபா ஊராள் யார்?
86. ஆசேருடைய கோத்திரத்தாள் பானுவேலின் குமாரத்தி யார்?
87. திப்ரியின் குமாரத்தி யார்?
88. யோவாசைக் களவாய் எடுத்தவள் யார்?
89. நெகேமியா புஸ்தகத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசியானவள் யார்?
90. எகிப்திலே லேவிக்குப் பிறந்தவள் யார்?
91. சவுலுடைய மனைவி யார்?
92. சூனேம் ஊராள் யார்?
93. தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்தவள் யார்?
94. சோரேக் ஆற்றங்கரையில் இருந்த ஸ்திரீ யார்?
95. தன் மாமியை முத்தமிட்டுப் போனவள் யார்?
96. தாவீதின் ஆறாம் குமாரனின் தாய் யார்?
97. கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியமானவள் யார்?
98. எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீ யார்?
99. கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பவனின் தாய் யார்?
100. இயேசு கிறிஸ்துவினுடைய தாய் யார்?

*முக்கிய குறிப்பு:*

- தூதிற்கு 20 பதில்கள் எழுதினால் போதுமானது.
- 100 பதில்களை முழுமையாகவும் சரியாகவும் எழுதும் முதல் மூன்று நபர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும்.

(பெண்கள் ஐக்கிய சங்கம்)

## அக்டோபர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | இருப்பிடம் |
|---|---|---|
| 1 | எசேக்கியா ராஜா<br>திபேரியா ராயன் | 2 இராஜாக்கள் 20:6<br>லூக்கா 3:1 |
| 2 | தாவீது<br>லேயாள் | 2 சாமுவேல் 5:5<br>ஆதியாகமம் 46:15 |
| 3 | யோசபாத்<br>அர்பக்சாத் | I இராஜாக்கள் 22:42<br>ஆதியாகமம் 11:1 |
| 4 | காலேப்<br>சாலொமோன் | யோசுவா 14:10<br>இராஜாக்கள் 7:3 |
| 5 | தரியு<br>ஓபேத்ஏதோம் | தானியேல் 5:31<br>I நாளாகமம் 26:8 |
| 6 | ஆபிரகாம்<br>சேம் | ஆதியாகமம் 21:5<br>ஆதியாகமம் 11:10 |
| 7 | யோசேப்பு<br>யோசுவா | ஆதியாகமம் 50:26<br>யோசுவா 24:29 |
| 8 | சாராள்<br>அகாஸ்வேரு | ஆதியாகமம் 23:1<br>எஸ்தர் 1:1 |
| 9 | தானியேல்<br>சிதேக்கியா | தானியேல் 10:2,3<br>2 இராஜாக்கள் 24:18 |
| 10 | சாலொமோன்<br>அதொனிகாம் | 1 இராஜாக்கள் 10:14<br>எஸ்றா 2:13 |
| 11 | அம்ராம்<br>இஸ்மவேல் | யாத்திராகமம் 6:20<br>ஆதியாகமம் 25:17 |
| 12 | அசபியா<br>கிதியோன் | 1 நாளாகமம் 26:30<br>நியாயாதிபதிகள் 8:24-26 |

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும். தயவுசெய்து WhatsApp மூலம் பதில்களை அனுப்புவதை தவிர்க்கவும்.*

## பிப்ரவரி மாத வேத வினாக்களுக்கான பதிலளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs.Desigta Jaison
3. Mr.Emmanuel (Ruwais)
4. Mrs.Esther Pauline Rani
5. Mrs.Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Helen Sharmila Ray
8. Mrs.Hema RajaGuru
9. Mr.Jeba Jino
10. Mrs.Jasmine Sobha
11. Mrs.Jebaseeli Asir
12. Mrs.Dr. Jenila Gannraj.L
13. Mrs.Jacqulin Rani
14. Mr.Joslin Ananth .N
15. Mr.Jo Ernast
16. Mrs.Kishi Maher
17. Mrs. Malar Ernast
18. Mr.Merlin Jeba Kinis
19. Mr.Michael
20. Mrs.Nandhini Rajkumar
21. Mrs.Padma Brin
22. Mrs.Praveena Arun (Ruwais)
23. Mr.Prawin Durai Sam (Ruwais)
24. Mrs.Priya Ranjith Kumar
25. Mrs.Persis John
26. Mrs.Peppin Jenson
27. Mr.Raja Guru Sekar
28. Mrs.Sarah Manuel
29. Mr.Salin Robert
30. Mrs.Sheeba Merlin
31. Mrs.Sheeba Herlin
32. Mrs.Sheneegah Stanly
33. Mrs.Sharmila Rajesh
34. Mrs.Selvi George
35. Mr. Selva Shaji
36. Mrs. Subija Jino
37. Mrs.Sweetilin Frank
38. Mrs. shobana Milton
39. Mrs. Shajeethe Gracy
40. Mrs. Suni Smila Edwin
41. Mrs.Valentine Sharmila Paul
42. Mrs. Vithya Dinesh

## Children who answered February – 2026 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Alton kim Kinis
4. Albern
5. Aleina
6. Andrea kim Kinis
7. Anana Natalie
8. Benson Immanuel Raj
9. Brightson Timothy Raj
10. Clement Dave
11. Daniel Vanya (RUWAIS)
12. Danion Lemuel
13. Defina
14. Diyas Dinesh
15. Effrin
16. Efrona
17. Eion Jayden
18. Eric Jayden
19. Evangelia Sharon
20. Evaniya Sherin
21. Evelyn Loria V
22. Elize Glora Alfred
23. Gabrilyn Hannah
24. Giana Elin
25. Hadriel Adventier
26. Jadon Darius Ruwais]
27. Jabree Aaron
28. Janey Titus
29. Jarick Aaron
30. Jaslin Shanna
31. Jaylan Paul Jino
32. Jeffrey Samuel
33. Jen Scudd
34. Jenessa Johnson
35. Jenilin Jose
36. Jerilyn Pushpam Nelson
37. Jessica Eban
38. Jevlyn Ana
39. Jeya Jehosheba Maher
40. Jim Scott
41. Joanna Paul Jino
42. Joel Abrakam
43. Joha Anit Manuel
44. Johan Sam Manuel
45. Johanan Paul Jino
46. Keren Tessa
47. Kathryn Joan
48. Kavi yalini
49. Kavin Immanel
50. Kev Shannen P.S(Ruwais)
51. Leona Juliet
52. Leonel I.J. Stalin
53. Liana Erin
54. Linuel I.J. Sherwyn
55. Mark Jayden
56. Mishael Wesley
57. Nashley Vinod Kiran
58. Nijolin Jose
59. Pristina samlynPrince
60. Rivqah Deby Rajkumar
61. Sam Jesvin Vincent
62. Selvajesvin (Ruwais)
63. Sherlyn Sana (Ruwais)
64. Starlyne Noble
65. Steffi Priscilla .R
66. Yedidiah Arun (Ruwais)
67. Yovaan jairus (Ruwais)
68. Hadassah Gracelin Arunkumar (Ruwais)



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**மனம் மாறிய காவலர்கள்**

தோமாவைக் காணாததால், "அரசரின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்!" என்று கலங்கி நின்றனர் காவலாளர்கள். தோமாவைத் தேடி கண்டுபிடிக்க முடியவில்லை. தோமா விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் அளித்த பின்பு, மறுபடியும் சிறைச்சாலையை நோக்கி நடந்து வந்தார். அவரைக் கண்ட சிறைச்சாலைக் காவலர்கள் அனைவரும் தோமாவின் கால்களில் விழுந்து வணங்கினர். தோமாவிடம் அவரை விடுவித்த அற்புத தேவனின் வல்லமையை மிகுந்த ஆவலுடன் கேட்டறிந்தனர். கடைசியாக, காவலர்கள் அனைவருமே இயேசு கிறிஸ்துவின் மீஹ்டு விசுவாசம் வைத்தனர்.

**அரசனுக்கு முன்பாக தோமா!**

சிறைக்காவலர்கள் மறுத்த போதிலும், தனக்கு நியமிக்கப்பட்ட சிறைச்சாலைப் பகுதிக்குள் தோமா கடந்து சென்றார். அவரைப் பார்த்த கைதிகள் அனைவரும் மிகுந்த சந்தோஷத்துடன் அவரை வரவேற்றனர். தோமா ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சிறையிலிருந்து வெளியேறியதையும் மறுபடியும் அந்த சிறைச்சாலைக்குத் திரும்பி வந்ததையும், சிறை அதிகாரள் அரசனுக்கு அறிவித்தனர்.

அதைக் கேட்ட அரசன் மிகவும் கலங்கி, தோமா தனக்கு விரோதமாக எழும்பி, "தனியொரு அரசனாக உருவாகி விடுவானோ?" என அஞ்சினான். எனவே தோமாவை அழைத்து, "ஏன் புதிதான உபதேசத்தை ஜனங்களுக்கு போதிக்கிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு தோமா, நான் என்ன தவறான உபதேசத்தைப் போதிக்கிறேன்? நான், இராஜாதி இராஜாவாக இவ்வுலகிற்கு மீன்றும் வரப்போகிற இயேசு

கிறிஸ்துவைப் பற்றியும், மக்கள் தங்கள் வாழ்க்கையில் சரியான பாதையில் பயணிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும்தான் போதிக்கிறேன். என் கடவுளுக்கு முன்பாக நான் மிகுந்த பயபக்தியோடும் பரிசுத்தத்தோடும், அவர் அருளிய சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் வாழ்கிறேன்" என்று கூறினார்.

அதைக் கேட்ட அரசன் மிகுந்த கோபத்துடன், "உன்னை என்னால் கொலை செய்ய முடியுமென்று உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

அப்போது தோமா, "என் ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவின் அனுமதியின்றி உம்மால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. மனித வாழ்க்கையும், அழகும், வாலிபமும் சீக்கிரமாக் கடந்து போய்விடும். ஆனால் நான் சொல்கிற வாழ்வோ நித்தியமானது" என்று தைரியமாகச் சொன்னார்.

அதைக் கேட்ட அந்த அரசன் மனம் மாறி, "உம் பார்வைக்கு நலமாகத் தோன்றுகிற எல்லாவற்றையும் செய்யும்" என்று சொல்லி தோமாவை விடுதலை செய்தான்.

**பிரசங்க அறை**

தோமா அங்கிருந்த அரசனின் தளபதியாகிய சிப்போரின் வேண்டுதலுக்கு இணங்கி, அவனது வீட்டிற்குச் சென்று தங்கினார். தோமா அங்கு வருகிற ஜனங்களுக்கு உபதேசிப்பதற்கு வசதியாக, சிப்போர் தன் வீட்டில் அனேகர் வந்து அமரக்கூடிய அறை ஒன்றை ஆயத்தப்படுத்திக் கொடுத்தான். தோமா தினமும் அங்கு கூடி வருகிற திரளான ஜனங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் போதகத்தைப் பற்றி விளக்கிக் கூறி, கர்த்தருக்கு நேராக அவர்களை வழி நடத்தினர். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட சிப்போரின் மனைவியும், மகளும் மிகுந்த ஆர்வத்தோடு தினமும் சத்தியத்தைக் கேட்டனர்.

சிப்போர் தோமாவிடம், "இப்பொழுது நாங்கள் குடும்பமாக சந்தோஷமாக இருக்கிறோம். நாங்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றுக்கொள்ள எங்களுக்காக ஜெபியுங்கள்" என்று வேண்டிக்கொண்டான். தோமா கர்த்தரை மகிமைப்படுத்தி, ஜெபித்து, அவர்களுடைய தலையின் மேல் எண்ணெய் வார்த்தார். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்.

**மகா ராணி – மந்திரி மனைவி சந்திப்பு**

தோமாவை விடுதலை செய்த பின்பு, அரசனாகிய மகாதேவன் தன் அரண்மனைக்குச் சென்றான். அங்கு தன் மனைவியும், மகா ராணியுமாகிய தெர்த்தியாளிடத்தில், தோமாவினால் வஞ்சிக்கப்பட்டு, மந்திரியாகிய சரிசியூவின் மனைவி மிக்தோனியா மனம் மாறியதாகக் கூறியதோடு, அவளை சந்தித்துப் பேசி, அவளை பழைய நிலைக்கு மாற்ற, அவளுடைய வீட்டுக்கு போகுமாறு தன் மனைவிக்கு ஆலோசனை கொடுத்தான்.

ஆகவே மகா ராணி மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து புறப்பட்டு, மந்திரியின் வீட்டிற்குச் சென்றாள். அங்கு மிக்தோனியா சாதாரணமான உடையணிந்தவளாக தேவனை நோக்கி மிகுந்த தாழ்மையோடு முழங்காலில் நின்று ஜெபித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தாள்.

- **தொடரும்**

## பாடல் பிறந்த கதை

### கர்த்தாவே மாந்தர் [பாமாலை 20]
### Dear Lord and Father of Mankind

1. கர்த்தாவே மாந்தர் தந்தையே,
பேதையோர் பொறுப்பீர்;
சுத்தாங்கம் தாரும் நெஞ்சத்தே
பக்தோராய்ச் சேவை செய்துமே
பணிந்து போற்றிட

2. நன்னாதர் அன்பின் அழைப்பை
தட்டாமல் நம்பியே
பன்னிரு சீஷர்தாம் உம்மை
பின்சென்றவண்ணம் நாங்களும்
பின்செல்லச் செய்வீரே.

**'அக்கினிக்குப் பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று'. 1இராஜா.19:12**

இப்பாடலை எழுதிய விட்டியர் (John G. Whittier) என்பவர் அமெரிக்காவில் நியூஹாம்ப்ஷயர் என்னுமிடத்தில் வசித்துவந்தார். அவரது ஊருக்கருகில் அடிக்கடிப் பல எழுப்புதல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தக் கூட்டங்களில் அதிகமான சத்தமும், சந்தடியும், ஆரவாரமும் உண்டாயின. இந்தக் கூட்டங்களை நடத்தியவர்கள், ஆரவாரத்துடன் நடக்கும் கூட்டங்களில் தான் உண்மையான இறையுணர்வு உண்டாகும் என நம்பினர். விட்டியர், Quakers என்னும் நண்பர் குழுவைச் சேர்ந்தவர். இக்குழுவினர், வாழ்க்கையில் ஆடம்பரமும் சொகுசும் இல்லாமல் ஜீவிப்பதே கடவுளுக்குப் பிரியமானது என நம்பினர். மேற்கூறிய எழுப்புதல் கூட்டங்களைப் பார்த்த விட்டியர், இதை ஆப்பிரிக்கர் இறையுணர்வு உண்டாவதற்காக 'சோமா' என்னும் மதுபானத்தைத் தயாரித்து அருந்துவதற்கு ஒப்பிட்டார். இதை அடிப்படையாகக் கொண்டு, வாழ்க்கையில் உண்டாகும் நெருக்கடியான நிலைமைகளை மேற்கொள்ளத் தினம் சிறிதுநேரம் அமைதியாகக் கடவுளுடன் தரித்திருப்பது மிக அவசியம் என்பதை உணர்த்துவதற்காக, 'The Brewing of Soma' (சோமா மதுபானம் வடித்தல்) என்னும் தலைப்பைக் கொண்ட ஓர் ஆங்கிலச் செய்யுளை விட்டியர் 1872'ல் எழுதினார். இச்செய்யுளிலுள்ள சில கவிகளை 1884ல் காரட் ஹாடர் என்னும் ஆங்கிலப் பாடகர் ஒரு பாடலாகத்

தொகுத்தார். இதுவே, 'கர்த்தாவே மாந்தர் தந்தையே' என்னும் பாடலாகும்.

இப்பாடலை எழுதிய ஜான் கிரீன்லீப் விட்டியர் (John Greenleaf Whittier), 1807ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 17ம் தேதி அமெரிக்காவில் ஹேவர்ஹில் (Haverhill, Massachusetts) என்னுமிடத்தில் பிறந்தார். இவரது தந்தை, 'உவேக்கர்' பிரிவைச் சேர்ந்த ஒரு விவசாயி. விட்டியர் இளவயதில் கடுமையான வேலை செய்யவேண்டியிருந்ததால் அவரது உடல்நிலை மிகவும் குன்றியது. ஓய்வு நேரங்களில் அவர் செருப்புத் தைக்கக் கற்றுக்கொண்டு, பள்ளிக்குச் செல்வதற்குத் தேவையான பணத்தைச் சம்பாதித்தார். பத்தொன்பதாவது வயதில் அவ்வூரிலுள்ள ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து, இரு ஆண்டுகள் கல்வி கற்றார். இங்கிருக்கையில் ஆங்கிலக் கவிஞரான, 'ராபர்ட் பர்ன்ஸ்' என்பவரின் செய்யுள்களால் கவரப்பட்டுத், தாமும் பல செய்யுள்கள் எழுதினார். மேலும், அடிமை ஒழிப்பு இயக்கத்தில் சேர்ந்து அதைக் குறித்துப் பத்திரிக்கைகளில் பல கட்டுரைகள் எழுதினார். சில ஆண்டுகள் தமது சொந்த மாகாணத்தில் சட்டசபை அங்கத்தினராகவும் பணியாற்றினார். விட்டியர் சங்கீதத் திறமைல்லாதவராதலால், தமது செய்யுள்களை அவர் பாடல்களாகக் கருதவில்லை. ஆனால் 1893ல் சிக்காகோ நகரில் நடந்த மதசம்பந்தமான மாநாட்டில் (Parliament of Religions) எல்லா மதத்தினரும் பாடுவதற்காகத் தொகுக்கப்பட்ட பாட்டுப் புத்தகத்தில், விட்டியர் எழுதிய அநேக செய்யுள்கள் பாடல்களாகச் சேர்க்கப் பட்டன. இவற்றில், 'கர்த்தாவே மாந்தர் தந்தையே' என்னும் பாடலும் ஒன்று.

விட்டியர் 1802ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 7ம் தேதி ஹாம்ப்டன் பால்ஸ் என்னுமிடத்தில் தமது 85வது வயதில் மறுமைக்குட்பட்டார்.

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**






# ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – மார்ச் 2026

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 3 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 6 | வெள்ளி | 8.45 pm – 11.00 pm | தூய திருவிருந்து மற்றும் பெண்கள் ஆராதனை - St.Andrew's church |
| 10 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 13 | வெள்ளி | 7.30pm – 9.30 pm | கன்வென்ஷன் - CSI Malayalam Church |
| 14 | சனி | 7.00 pm – 9.00pm | Retreat - Ruwais |
| 15 | ஞாயிறு | 9.00am – 4.30pm | Retreat – Abu Dhabi |
| 15 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 17 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 20 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.45 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St. Andrew's church |
| 24 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 27 | வெள்ளி | 8.45 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 29 | ஞாயிறு | 4.30 pm – 7.30 pm | குருத்தோலை ஞாயிறு ஆராதனை – St.Andrew's church |
| 31 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| | | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள் – மார்ச் 2026

| | |
|---|---|
| **06-03-26** | |
| பாமாலை – 18 | எங்கும் நிறைந்த தெய்வமே |
| | கர்த்தரைப் போற்றியே வாழ்த்துது |
| கீர்த்தனை – 266 & 172 | ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே<br>பாதம் ஒன்றே வேண்டும் |
| பாமாலை – 8 | தந்தாய்! உம்மைத் துதித்தே |
| **20-03-26** | |
| பாமாலை – 6 | என் நெஞ்சமே, நீ மோட்சத்தை |
| பாமாலை – 329 | அருள்நாதா நம்பி வந்தேன் |
| கீர்த்தனை – 154 & 185 | கிருபை புரிந்தெனை ஆள்<br>இயேசு நேசிக்கிறார் |
| கீர்த்தனை – 248 | வந்து நல்வரம் தந்தனுப்பையா |
| **27-03-26** | |
| பாமாலை – 19 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை – 314 | வாழ்க, சிலுவையே வாழ்க! |
| கீர்த்தனை – 177 & 275 | வாரீரோ? வினை தீரீரோ?<br>பக்தருடன் பாடுவேன் – பரம சபை |
| கீர்த்தனை – 173 | வாரும் ஐயா, போதகரே |
| **29-03-26 – குருத்தோலை ஞாயிறு** | |
| பாமாலை – 92 | ஓசன்னா பாலர் பாடும் |
| பாமாலை – 94 | தயாள இயேசு, தேவரீர் |
| கீர்த்தனை – 40 & 41 | பவனி செல்கின்றார் ராசா<br>ஓசன்னா பாடுவோம், ஏசுவின் |
| பாமாலை – 91 | இஸ்திரீயின் வித்தவர்க்கு |

# திருமறை பாட ஒழுங்குகள் – மார்ச் 2026

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **06-03-26** | திருமறையில் பெண்கள் | ஆதி. 2:18-25 | எபேசியர் 5:22-31 | யோவான் 4:4-14 | - |
| **20-03-26** | புது வாழ்வுக்கு அழைப்பு | ஏசாயா 1:12-17 | எபேசியர் 6:5-9 | லூக்கா 15:22-32 | - |
| **27-03-26** | கிறிஸ்தவர்களின் அரசியல் பொறுப்பு | யாத். 3:1-12 | ரோமர் 13:1-7 | மத்தேயு 17:22-27 | 130 |
| **29-03-26** | குருத்தோலை ஞாயிறு | சகரியா 9:1-12 | 1 கொரி. 3:16-23 | மாற்கு 11:1-11 | - |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **03-03-26** | நீதிமொழிகள் | 25:1-15 | Al Wadha |
| **10-03-26** | நீதிமொழிகள் | 25:16-28 | Hamdhan |
| **17-03-26** | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| **24-03-26** | நீதிமொழிகள் | 26:1-14 | Muroor |
| **31-03-26** | நீதிமொழிகள் | 26:15-28 | Mussafah |

# HAPPY BIRTHDAY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Radja Thomas |
| 3 | Mrs. | Jebakani Jeya. S |
| 3 | Master | Jerrald |
| 4 | Mrs. | Girija Virgin |
| 4 | Ms. | Giana Elin |
| 4 | Ms. | Liana Erin |
| 5 | Baby | Leona Juliet. J. B |
| 5 | Mr. | Raja Singh |
| 7 | Baby | Brendan Dave |
| 9 | Ms. | Miraclin Joy |
| 10 | Baby | Aaron David |
| 10 | Ms. | Stephy Glory S |
| 11 | Master | Jeffery Samvel |
| 12 | Baby. | Janey Jessica Yamuna Titus |
| 12 | Mr. | Wilfred Sumad San K |
| 12 | Mrs. | Jasmine Sobha |
| 12 | Ms. | Efrona |
| 12 | Mr. | Sunil Manuel Augustine |
| 13 | Mrs. | Shobana Milton |
| 13 | Mrs. | Christella |
| 13 | Mrs. | Steffi Prince |
| 16 | Baby | Jayden |
| 17 | Mr. | Srinivasan Jayaprakasam |
| 18 | Mr. | Danial Abraham |
| 19 | Ms. | Sherly Rajam |
| 19 | Mr. | Eugene Noble |
| 20 | Mr. | Kevin Jaffe Kumar |
| 21 | Master | Nethan |
| 22 | Miss. | Jesse Grace |
| 23 | Mr. | Joshua Amos Sam |
| 23 | Mrs. | Valentine Isabel Sharmila |
| 24 | Mrs. | Lincy Godwin |
| 24 | Ms. | Keren Tessa |
| 24 | Master | Jeffery Pauldaran |
| 25 | Mr. | Selva Shaji |
| 25 | Mr. | Ajin Kumar K C |
| 25 | Mrs. | Pinky Ebulin |
| 25 | Mrs. | Teressa Jeyakumar |
| 25 | Mrs. | Shyni D S |
| 26 | Mrs. | Yamuna Agastian |
| 27 | Mr. | Vethakkan Pandian |
| 30 | Mrs. | Jasmine Mohan |
| 31 | Mr. | Joshua Jimson |
| 31 | Mr. | Easter Rajesh |

# HAPPY ANNIVERSARY

| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 3 | Mr. & Mrs | Samuel Prakashraj. R |

## NEW ARRIVAL



| இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் சங். 127.4a | | |
|---|---|---|
| S.No. | Baby Name | Parent's Name |
| 1 | Giannis Vinod Kiran | Mr. Vinod Kiran & Mrs. Aruna Vinod Kiran |

## ஏப்ரல் மாத தலைப்பு

# நற்செய்திப் பணி

# *Evangelism*



Church Retreat



Medical Mission Service





## SARAH

"Nothing is too hard for God."



## ESTHER

"God can turn a nobody into somebody."



## HAGAR

"Even in the wilderness, God is there."



## ELIZABETH

"You will give birth to greatness."



## RAHAB

"Your past doesn't matter. God can use anyone."



## MARY

"It shall be unto you according to God's Word."



## HANNAH

"God answers prayers."



## MARTHA

"Dead things can live again."



## RUTH

"It's not over until God says so."



## DORCAS

"God never forgets."